**மீகஹகிவுல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 08 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மீகஹகிவுல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்குரிய 04 கைத்தொழில்களுக்கான கடன் பட்டோர் மீதி ரூபா 136,155 தொகையினால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | கணக்கீடு செய்வதற்கான வழுவை 2019 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி எஞ்சியுள்ள காகிதாதிகளின் தொகை ரூபா 38,558 எனக் கணக்கீடு செய்த காரணத்தினால் திரண்ட நிதியம் மற்றும் நடைமுறைக் கணக்கு என்பன குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சரியான கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | விடுபட்ட வழு 2019 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) | 04 பல்வேறு கடன் பட்டோரிற்காக கணக்குகளில் ரூபா 141,978 ஆன தொகை வேறாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் நடைபெற்ற இவ்வழுவை 2019 ஆம் ஆண்டில் கணக்குத் தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஆ) <u>கணக்காய்விற்கான சான்றுகளின்மை</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 98,754,948 பெறுமதியான 05 நிலையான சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 5,141,503 பெறுமதியான 02 கடன்பட்டோர் விடயங்கள் என்பனவற்றின் உறுதிப்பத்திரம், திட்டவரைபடம் மற்றும் கையளிப்பு கட்டளைகள், விபரமான அட்டவணை, நிலையான சொத்துப் பதிவேடு, பயன்பாட்டு பதிவேடு மீதி உறுதிப்படுத்தல் மற்றும் காலப் பகுப்பாய்வு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மீதிகளை உறுதிப்படுத்தப்பட்டு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விபரமான அட்டவணை மற்றும் காலப்பகுப்பாய்வு அறிக்கை, மீதி உறதிப படுத்தல் என்பனவற்றை 2019 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 1.4 <u>இணங்காமைகள்</u>

**<u>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை</u>**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 158 மற்றும் 159 ஆம் பிரிவு | வாடகை, நீர்க் கட்டணம், வியாபார வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பனவற்றிற்கு உரிய ரூபா 1,125,034 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் உடனடியாக அறவிடப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | <u>1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்)</u> | | | |
| | (i) விதி 114 | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிர்மாணச் | முற்பணம் மீள்நிரப்பப்பட | உரிய தரப்பினரிடம் அறவிடப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்றிட்டங்களிற்காக 05 கிராம அபிவிருத்தி சங்கங்கள் 05 இற்கு முற்பணமாக ரூபா 494,031 செலுத்தப் பட்டிருந்ததுடன், அந்நிர்மாணப் பணிகள் முடிக்கப்பட்டோ மீளாய்வாண்டில் திசம்பர் 31 ஆம் திகதிக்கு அம்முற்பணம் தீர்க்கப்பட்டோ இருக்கவில்லை. | வேண்டும். | |
| (ii) விதி 203,204 | 2018 பொருள் மெய்மையாய்வு சபை விதந்துரைகளில் குறிப்பிடப்பட்ட 61 பொருள் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளாதிருந்ததுடன் அவற்றின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) <u>இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம்</u><br>(i) நிதிப் பிரமாணம் 110 | மீளாய்வாண்டில் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக ஆவணம் ஒன்று பேணப்படவில்லை. | ஆவணம் பேணப்பட வேண்டும் | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். |
| (ii) நிதிப் பிரமாணம் 1646 | 06 வாகனங்களுக்குரிய 2018 ஆம் ஆண்டிற்கான ஓட்டக் குறிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நாளாந்த ஓட்டக் குறிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் | சரியாகத் தயாரிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்படும். |

## 2. <u>நிதி மீளாய்வு</u>

### 2.1 <u>நிதி விளைவுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,649,255 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,377,252 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 970,000 | 1,319,437 | 1,041,362 | 322,510 | 920,000 | 1,170,982 | 810,601 | 360,382 |
| (ii) | வாடகை | 3,787,612 | 3,715,812 | 2,996,737 | 719,074 | 2,814,663 | 2,814,663 | 2,891,574 | 85,293 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 325,000 | 325,000 | 546,850 | - | 484,000 | 484,000 | 453,305 | 74,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 450,000 | 450,000 | 587,471 | 83,450 | 550,000 | 550,000 | 342,825 | 228,145 |
| | மொத்தம் | 5,532,612 | 5,810,249 | 5,172,420 | 1,125,034 | 4,768,663 | 5,019,645 | 4,498,305 | 747,820 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் பெற வேண்டிய வருமானக் கடன் பட்டோர் கணக்குகளின் தொகை ரூபா 13,219,508 ஆகக் காணப்படுவதுடன், அது மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,304,794 ஆகும். |

### 2.2.3 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 22 கடைகளுக்கு 2014 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்படாது 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 63,530 தொகை வருமானம் கிடைக்காதிருந்தது. | வாடகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்தம் தயாரிக்கப்படுவதுடன் ஏனைய கடை வாடகைக்குப் பெற்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 2.2.4 வேறு வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ஜே.சீ.பீ இயந்திரம் சேவை நடவடிக்கைகளுக்காக வெளியாருக்கு வாடகைக்கு விடப்பட்டதனால் அறவிடப்பட வேண்டிய ரூபா 290,500 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடப்படும். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,300,000 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 92,842 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய நிதியை சபை நிதியத்திற்கு உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கு மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் எந்தவொரு உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டோ பின்பற்றியோ இருக்கவில்லை. | உப விதிகள் பிறப்பிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும். | உப விதிகள் பிறப்பிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

(ஆ) <u>நிலைபேறான அபிவிருத்தி இலக்கு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தெளிவாக இனங் கண்டு, அவற்றை மதிபிடுவபதற்கான சுட்டிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.2 <u>முகாமைத்துவ செயற்திறனின்மைகள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆகஸ்ட் 12 ஆம் திகதி கரமெட்டிய தனியார் நிறுவனமொன்றில் வேலைத் தளத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பெக்கோ லோடர் இயந்திரம் வேறு ஒரு வாகனத்துடன் மோதிய காரணத்தினால் ஏற்பட்ட நஷ்டம் ரூபா 28,905 அறவிடப்படாதிருந்தது. | நஷ்டம் அறவிடப்பட வேண்டும் | உரிய தரப்பினரிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் செலுத்த வேண்டிய ரூபா 2,208,653 ஆன தொகை மீளாய்வாண்டிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலுத்த வேண்டிய நிலுவை மீதி ரூபா 4,156,888 ஆகும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் 10 நிரப்பப்படாது காணப்பட்டன. | பதவியணி வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும் | வெற்றிடமாகவுள்ள பதவியணியினர்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| டொலமைட் செயற்றிட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா 533,100 பெறுமதியான கட்டடம் 16 வருடங்களாக பயன்படுத்தப்படாதிருந்தது. | கட்டிடம் பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 பெறுகை செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் மட்டும் நடாத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்று காணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடாத்தப்படும். |